# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 5 வியாழக்கிழமை (21-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:359


# அமைதிச் சூழல், இயல்பு வாழ்க்கை இவற்றையே வலியுறுத்துகின்றோம்!

## 'புலிகளின் குரல்' விழாவில் புலித்தேவன் உரை



கிளிநொச்சி,நவம்பர்21

எமது மக்கள் அமைதியான சூழலில் - இயல்பு வாழ்க்கை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் விடயங்களையே பேச்சுக்களில் வலியுறுத்தி வருகின்றோம்.

விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பிரமுகரும் சமாதான செயலணியின் செயலாளருமான புலித்தேவன் இவ்வாறு தெரிவித்தார்.

'புலிகளின் குரல்' வானொலியின் 12ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று மாலை 4 மணியளவில் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் புலித்தேவன் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்பதையே வற்புறுத்திவருகிறோம்.

முக்கியமாக, எமது தேசியத் தலைவர் மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதிலும் இடம்பெயர்ந்தோர் தங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மதுரங்குளியில் தொடர்ந்து பதற்றம்

புத்தளம் மதுரங்குளிப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட படையினரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. கற்பிட்டி கடற்கரை முகாமிலிருந்து கடற்படை வீரர்கள் நேற்று வரவழைக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

பொலீஸாரும், இராணுவத்தினரும் ஏற்கனவே பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அநுராதபுரம், பொலநறுவைப் பகுதிகளிலிருந்து சுமார் 250 பொலீஸார் புத்தளம் பகுதிக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றனர். (ஐ)

# நெடுந்தீவை விட்டு ஈ.பி.டி.பி. விலகாது!

## கட்சியின் பேச்சாளர் தகவல்

கொழும்பு,நவம்பர்21

**நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் நெடுந்தீவில் அரசியற்பணிகளில் ஈடுபடச் சென்றிருக்கும் ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை.**

**அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோருவதில் எந்தவித நியாயங்களும் கிடையாது.**

**ஈ.பி.டி.பி. கட்சியின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.**

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. கட்சியினர் மீண்டும் தரையிறக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் சர்ச்சை தீவிரமடைந்து வருவது பற்றி கேட்டபோதே கட்சியின் பேச்சாளர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

"நெடுந்தீவில் எமக்கு எதிராகத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்காவுடனான உடன்படிக்கை அமுலுக்கு வந்தது

கொழும்பு,நவ.21

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வந்தது.

கடந்த ஜூன்மாதம் 11ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு நாடுகளினதும் விமானக்கம்பனிகள் கட்டுப்பாடற்ற விமானப் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)





நெடுந்தீவில் தரையிறங்கியுள்ள ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்திவரும் பொதுமக்களையே படத்தில் காண்கிறீர்கள்.

நெடுந்தீவு ஈ.பி.டி.பி முகாமுக்கு அருகே சந்தைப் பகுதியில் ஈ.பி.டி.பிக்கு எதிரான சுலோக அட்டைகளுடன் நூற்றுக்கணக்கானோர் திரண்டிருக்கின்றனர்.

# பல்கலைக்கழக மாணவன் உட்பட மூவர் நெடுந்தீவுப் பொலீஸாரினால் கைது!

## கண்காணிப்புக்குழு தலையிட்டு விடுவித்தது

யாழ்ப்பாணம்,நவ.21

மக்களின் விருப்பத்துக்கு மாறாக நெடுந்தீவுப் பகுதியில் தரையிறங்கியுள்ள ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் பல்கலைக்கழக மாணவன் உட்பட மூவர் பொலீஸாரால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் நேற்று மாலையில் இவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களின் கைது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் நெடுந்தீவுப் பொலீஸாருடன் பேச்சு நடத்தியதை அடுத்து மூவரும் விடுதலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஈ.பி.டி.பியை வெளியேற்றும்

# எதிர்ப்பு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.குடாநாட்டிலிருந்து ஈ.பி.டி.பியினர் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறவேண்டும் எனக் கோரியும் -

நெடுந்தீவில் தரையிறங்கியுள்ள ஈபி.டி.பியினரை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கோரி நெடுந்தீவு மக்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் -

யாழ்.குடாநாட்டில் நேற்றுமுதல் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

(02ஆம் பக்கம் பார்க்க)

### கைதான மாணவனை விடுவிக்கக்கோரி

# பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியாகச் சென்று மகஜர்

யாழ்ப்பாணம்,நவ.21

நேற்றுக்காலை நெடுந்தீவில் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் சு.சந்திரமோகன் மற்றும் அவர்து சகோதரனான சு.கங்காதரன், பாடசாலை மாணவன் கு.ஜனேந்திரன் ஆகியோரை விடுதலை செய்யக்கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முழுமையான பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நேற்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடிய பல நூற்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பதற்ற நிலையை அடுத்து

# உணவுப் பொருள்களுக்கு நெடுந்தீவில் தட்டுப்பாடு

## வீடு வீடாகச் சென்று விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.21

நெடுந்தீவில் தொடரும் அசாதாரண நிலைமை காரணமாக அங்கு உணவுப்பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐந்து நாள்களாக நெடுந்தீவில் நிலவும் பதற்ற நிலையை அடுத்து, நெடுந்தீவுக்கும் - குறிகாட்டுவானுக்கும் இடையில் பயணிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. வீதித் தடைகளை உடனடியாக நீக்க முடிவு

## பாதுகாப்பு உபகுழுவின் கூட்டத்தில் தீர்மானம்

மட்டக்களப்பு,நவ.21

மட்டக்களப்புச் செயலகத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் படிப்படியாக அகற்றப்படுவர். நூல் நிலையத்திலுள்ள பொலீஸார் உடனடியாக வெளியேற்றப்படுவர். வீதித் தடைகளும் உடனடியாக நீக்கப்படும். 345இற்கு மேற்பட்ட தனியார் வீடுகளில் குடிகொண்டிருக்கும் இராணுவத்தினர் படிப்படியாக வெளியேற்றப் படுவர்.

உயர் பாதுகாப்புத் தொடர்பான உபகுழுவின் மட்டக்களப்பு மாவட்டக் கூட்டம், நேற்றுக் காலை வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றபொழுது இதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்கூட்டம் காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது.

அரசாங்கம் நிதி உட்பட ஏனைய

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தடம்புரண்ட பவுஸரிலிருந்து வெளியேறிய பெற்றோலுக்கு முண்டியடித்த சனக்கூட்டம்

## உரும்பிராயில் நேற்றுக் காலை சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.21

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பவுஸர் ஒன்று நேற்றுக் காலை உரும்பிராய் சந்திப் பகுதியில் தடம்புரண்டது.

அப்போது பவுஸரில் வெடிப்பு ஏற்பட்டது. அதன் மூடியும் கழன்றது. இதனால் தொடர்ச்சியாக அதிலிருந்து பெற்றோல் வெளியேறத் தொடங்கியது. சாரதியால் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவ்வாறு பவுஸரில் இருந்து பெற்றோல் வெளியேறிக்கொண்டிருந்ததை அறிந்த மக்கள் தங்கள் கையில் அகப்பட்ட பாத்திரங்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பெற்றோலை அள்ளி நிரப்பிச்செல்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. சிலர் பொலித்தீன் பைகளிலும் பெற்றோலை எடுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதனை வேடிக்கை பார்ப்பதற்றாக அங்கு பெருமளவு சனக் கூட்டம் திரண்டிருந்தது.

பின்னர், சம்பவ இடத்துக்கு பொலீஸார் வந்ததை அடுத்து பெற்றோல் எடுத்துக்கொண்டிருந்த அனைவரும் அங்கிருந்து சிதறி ஓடினர்.

விபத்தின்போது பவுஸரில் 33 ஆயிரம் லீற்றர் பெற்றோல் இருந்தது. அதில் சுமார் 3ஆயிரம் லீற்றர் பெற்றோல் வெளியேறி விரயமாகியது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏ.எம்.ரி. நிறுவனத்துக்கு சொந்தமான இந்த பவுஸர் காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் வீதியை விட்டு விலகித் தடம்புரண்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. உடனடியாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பவுஸர்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்து விபத்துக்குள்ளான பவுஸரில் இருந்த பெற்றோல் ஏனைய பவுஸர்களுக்கு 'பம்'செய்யப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது.

இதேவேளை-

குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கான பெற்றோல் விநியோகம் வழமைபோல் தொடர்ந்து இடம்பெறும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4-17)

# ஓமந்தை சோதனைச்சாவடியில் சந்திரநேரு எம்.பிக்குச் 'சோதனை'!

காரைதீவு,நவ.21

ஓமந்தை சோதனைச்சாவடியில் படையினரின் கெடுபிடியால் அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பு எம்.பி. அ.சந்திரநேருவின் வன்னிக்கான பயணம் அரைமணி நேரம் தாமதமாகியது.

கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நடத்திய கிழக்கு அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் பங்குபற்ற நேரு எம்.பி. சென்றபோதே இது நடந்தது.

அன்று பிற்பகல் 4.30 மணியளவில் சோதனைச்சாவடியைச் சென்றடைந்த எம்.பியின் வாகனத்தைச் சோதனையிடவேண்டும் என்று படையினர் அடம்பிடித்திருக்கின்றனர். எம்.பி. தன் அடையாள அட்டையைக் காட்டி வாதிட்டபோது படையினர் விடவில்லை.

உடனே வவுனியாதிரும்பி ஐ.சி.ஆர்.சியிடம் முறையிட்டார். பின்னர் பிரதமமந்திரி, பாதுகாப்பு அமைச்சர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரிடமும் அறிவித்துவிட்டு மீண்டும் ஓமந்தையூடாகச் சென்றார். (ஐ)

## ஒலிநாடா அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,நவ.21

நிதர்சனம் நிறுவனம் வழங்கும் இசைப்பிரியனின் இசை நெறியாள்கையில் உருவான 'கல்லறை தழுவும் கானங்கள்' ஒலிநாடா அறிமுகவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

மாவீரர் நினைவாக தயாரிக்கப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடா அறிமுகவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறுவதாகவிருந்தது. (எ-9)

# இருவார காலத்துக்குள் 135 முறைப்பாடுகள்


## கிழக்கில் புலிகளின் காவல்துறைக்கு

மட்டக்களப்பு,நவ.21

மட்டக்களப்பு மாவட்டம் பளுகாமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழீழ காவல்துறை பணிமனையில் இரண்டு வாரங்களுக்குள் 135 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1996, 97 காலப்பகுதியில் பளுகாமத்தில் இயங்கி வந்த காவல் நிலையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. தற்போது சமாதான சூழ்நிலை நிலவுவதால் அங்கு மீண்டும் காவல் பணிமனை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்களும் தமிழீழ காவல் துறைக்கு வந்து தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)







நெடுந்தீவில் கைதான பல்கலைக்கழக மாணவனை விடுவிக்கக்கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் நோக்கி பேரணியாகச் சென்று மகஜர் கையளித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# நெடுந்தீவில் தரையிறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினரை வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுக்குக!

## பொது அமைப்புக்கள் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.21

நெடுந்தீவில் தரையிறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து உடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கும்படி பல்வேறு பொது அமைப்புகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், இந்து சமயப் பேரவை, வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் உட்பட பல அமைப்புக்கள் மகஜர்களைக் கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ளன.

இதேவேளை - தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா யாழ்கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு நேரில் சென்று இவ்விடயம் குறித்து அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

சமாதான சூழ்நிலையில் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தரையிறங்கி அங்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர். எனவே, அங்கு மக்கள் நிம்மதியாக வாழ ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாவை சேனாதிராசா கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார்.

அதேசமயம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நேற்றுமுன்தினம் சந்தித்து நெடுந்தீவு நிலைவரம் குறித்து பேச்சு நடத்தினர். (ஐ-3)

## மந்துவில் விவசாயிகளுக்கு உரம், நெல் விநியோகம்

சாவகச்சேரி,நவ.21

மந்துவில் மேற்கு, வடக்கு கிழக்கு பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சேவாலங்கா நிறுவனம் அவர்களது விவசாயச் செய்கையை மேம்படுத்தும் நோக்குடன், சம்மேளனங்களுக் கூடாக உரவகைகள், நெல் என்பவற்றை வழங்கி வருகின்றது.

இதேவேளை சேவாலங்கா நிறுவனம் தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக யூரியாவையும் 'பி1' உரத்தையும் வழங்கி வருகின்றது. (எ-31)

## எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாணவர்கள், ஆசிரியர்களின் வரவு குறைந்து காணப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் நேற்று முற்பகல் 10 மணிவரை மூடப்பட்டிருந்தன.

காலையில் பாடசாலை மாணவர்களுக்காக மட்டும் நடத்தப்பட்ட பஸ் சேவை முற்பகல் 10மணிக்குப் பின்னரே வழமைக்குத் திரும்பியது.

எனினும், தீவுப்பகுதியில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் எதிர்ப்பு, வழிமறிப்புப் போராட்டம் காரணமாக தீவுப்பகுதிக்கான பஸ்சேவைகள் நடைபெறவில்லை.

இதேவேளை - பஸ்சேவைகள் காலை 10மணிவரை நடைபெறாது என்பதை அறிந்துகொள்ளாத பொதுமக்கள் பலர் நீண்டநேரமாக பஸ் தரிப்பு நிலையங்களில் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

மேற்படி எதிர்ப்புப் போராட்டம் காரணமாக நேற்றுக் காலையில் வெறிச்சோடிக்காணப்பட்ட யாழ் நகரப் பகுதி முற்பகல் 10.30 மணிக்குப் பின்னர் வழமை நிலைக்குத் திரும்பியது.

இதேவேளை -

எதிர்ப்பு நடவடிக்கைகளை இன்று குடாநாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கு மாணவர் அமைப்புகளும் வெகுஜன அமைப்புகளும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இன்று நடைபெறவுள்ள எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இன்று காலை மாணவர்கள் கூடி முடிவு செய்வர் என்று மாணவர் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-8-10-13-17-16)

## ஐக்கிய அரபு இராச்சியத்தில்

# சட்டவிரோதமாகத் தங்கியுள்ள 12,000 இலங்கையருக்கு ஆபத்து!

ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாகத் தங்கித் தொழில் புரியும் 12,000 ஆயிரம் இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்கள் அனைவரையும் இரண்டு மாத காலக்கெடுவுக்குள் சரணடையுமாறு அந்தநாட்டு அரசு அறிவித்துள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இதனைத் தெரிவித்துள்ளது. இரண்டு மாத காலக்கெடுவுக்குள் சரணடைபவர்கள் எவ்வித தண்டப்பணமும் அறவிடப்படாமல் அவர்களின் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அந்த நாட்டின் குடியகல்வு குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சரணடைபவர்கள் தங்கியிருப்பதற்கான தகுந்த காரணங்களை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் சட்டபூர்வமாகத் தங்கியிருப்பதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயப்படும் எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சட்ட விரோதமாகத் தங்கியுள்ள 12,000 ஆயிரம் இலங்கையர்களின் பெயர் விவரங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆராய்ந்து வருகிறது. (ஐ)

## மட்டு. வீதித்தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளைச் செய்துகொடுக்கும் பட்சத்தில் பொது இடங்களில் இருந்து இராணுவத்தினரையும் பொலிஸாரையும் உடனடியாக வெளியேற்றுவதில் பிரச்சினை இல்லையென்று இக்கூட்டத்தில் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, ரியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர, பிரிகேடியர் எஸ்.ஆர்.பாலசூரிய, பிரிகேடியர் பி.சந்திரவன்ஸ, எஸ்.எஸ்.பி.மஜீத், எஸ்.எஸ்.பி.பி.எஸ்.டி. சில்வா, அரச அதிபர் மோனகுருசாமி, வவுணதீவு செயலாளர் மா.உதயகுமார் உட்பட 25 அதிகாரிகள் அரச தரப்பில் கலந்துகொண்டனர்.

புலிகளின் தரப்பில், புலிகளின் சிரேஷ்ட தளபதி கேணல் கருணா, மட்டு. - அம்பாறைத் தளபதி ரமேஸ், ஜெயந்தன் படைப்பிரிவு சிறப்புத் தளபதி ராம், மட்டு.- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு.-அம்பாறை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பானுகா, மகளிர் படையணிப் பொறுப்பாளர் நிலாவினி, புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் கீர்த்தி, மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் வாமணன், தொடர்பாடல் பிரிவுப் பொறுப்பாளர் பரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹெய்க்கி ஹீப் கோனன் தலைமையில் உபகுழுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. தமது சொந்த இடங்களில் குடியேற விரும்புகின்ற முஸ்லிம்கள்; சிங்களவர்கள் தமது காணிக்குரிய உறுதிப்பத்திரத்துடன் வந்து குடியேறலாம். அத்துமீறிக் குடியேறியிருப்பவர்கள் அகற்றப்படுவார்கள் என புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்ற கூட்டங்களின் மூலம் நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என்று மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தெரிவித்தார்.

கூட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த புலிகளின் சிரேஷ்ட தளபதி கேணல் கருணா, இவ்வாறு அடிக்கடி சந்திப்பதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதுடன் புரிந்துணர்வையும் கட்டியெழுப்பலாம் - என்றார்.

அடுத்த மாவட்ட உபகுழுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி அம்பாறையில் நடைபெறும். (ஐ-4)

# பேரழிவு தரும் ஆயுதங்கள் இல்லை என்பதை ஈராக் நிரூபிக்க வேண்டும்

## ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவிப்பு



ஹன்ஸ் பில்க்ஸ் மற்றும் அவரது சகா.

சைப்பிரஸ்,நவ.21

ஈராக் தன்னிடம் பேரழிவைத்தரும் ஆயுதங்கள் எவையும் இல்லை என்று நிரூபிக்கவேண்டும்.

- இவ்வாறு ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹன்ஸ் பில்க்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஈராக் சென்ற அவரும் அவரது சகாவான மொஹமட் எல் புராடியும் நேற்று புதனகிழமை சைப்பிரஸ் திரும்பினர். ஈராக்குக்கான தமது இரு நாள் விஜயம் குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே பில்க்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்களுடன் ஈராக் சென்ற 20 இற்கும் மேற்பட்ட கண்காணிப்புக்குழு அதிகாரிகள தொடர்ந்தும் ஈராக்கில் தங்கியிருந்து தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈராக்கில் தங்கியிருந்த இரு நாளகளில் அங்குள்ள தலைவர்களுடன் தாம் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தியதாகவும் ஹன்ஸ் பில்க்ஸ் தெரிவித்தார்.

தம்மிடம் எந்தப் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களும் இல்லை என்பதே ஈராக்கின் நிலைப்பாடு. ஆனால், அதற்குரிய சான்றாதாரங்களை ஈராக் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

ஈராக் தனது ஆயுதக் கையிருப்பை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தம் வசம் இருக்கும் ஆயுதங்களின் விவரத்தை வெளியிடுவதற்கு ஈராக் சம்மதித்துள்ளதாக எல் பறாடி தெரிவித்தார்.

முன்னதாக இந்தத் தடவை ஐ.நா. பிரேரணைக்கு ஏற்ப ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் ஈராக் ஒத்துழைக்கும் என்று அதிபர் சதாம் ஹுசைனின் ஆலோசகர் ஜெனரல் அமிர் அல் - சாடி தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே ஈராக் சென்றுள்ள ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு தொகுதி கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பக்தாத் போய்ச் சேருவார்கள்.

இதற்கிடையில் -

ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் ஈராக் விவகாரம் தொடர்பாக வெளியிட்ட கருத்துக் குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் பிரச்சினையைக் கிளப்பியுள்ளார்.

ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட பகுதிகளில் கணகாணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் -

ஈராக்கின் இந்தச் செயல் ஐ.நா. பிரேரணையை மீறும் நடவடிக்கை என்றும் -

அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனால், செவ்வாயன்று கொசோவோவில் இருந்து கருத்து வெளியிட்ட ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான விமானங்கள் மீது ஈராக் தாக்குதல் நடத்துவது ஐ.நா.பிரேரணையை மீறுவதாகாது என்றார்.

அனானின் இந்தக் கருத்துக்கு ரம்ஸ்பீல்ட் கண்டனம் தெரிவித்துள்ளார். இத்தகைய கருத்துகளை அனான் வெளியிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

(ம)

## பலஸ்தீனர்கள் ஐவர் பலி

ஜெரூசலேம்,நவ.21

மேற்குக்கரை நகரமான துல்கரம் என்ற இடத்தில் இஸ்ரேலியத் துருப்பினர் திடீரென ஊடுருவி 5 பலஸ்தீனர்களைச் சுட்டுக்கொன்றதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் ஒரு சிறுவனும் தேடப்படும் ஆயுததாரியும் அடங்குவர் என்றும், இந்தத் தாக்குதலில் மேலும் 11பேர் காயமடைந்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது தாக்குதலில் ஆயுததாரியான தாரிக் அல் - சஹ்ரால் உயிரிழந்தமையை இஸ்ரேலியத் தரப்பு உறுதிசெய்தது. இஸ்ரேலில் நடத்தப்பட்ட பல தாக்குதல்களுடன் அவருக்குத் தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நகரில் அறிவிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்த சிறிது நேரத்தில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர்.

அதேசமயம் - கிழக்குப் பகுதி நகரான டஸ்க்கில் இஸ்ரேலியத் துருப்பினர் டாங்கிகள், ஹெலிகள் சகிதம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## கென்யாவில் அதிபர் தேர்தல் பிரசார நடவடிக்கை தீவிரம்

நைரோபி,நவ.21

கிழக்காபிரிக்க நாடான கென்யாவில் நடைபெறவுள்ள மூன்றாவது அதிபர் தேர்தலில் போட்டியிடுவதறகான வேட்புமனுக்களை பிரதான வேட்பாளர்கள் இருவரும் தாக்கல் செய்துள்ளனர். அதனை அடுத்து தமது பிரசார நடவடிக்கைகளையும் அவர்கள் தீவிரமாக ஆரம்பித்துள்ளனர்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் வேட்பாளரான புருகு கென்யட்டா தற்போதைய அதிபர் டானியல் ஆர்ப் மொய் சகிதம் பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் புடைசூழ வந்து முதலில் தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். சில மணி நேரங்களின் பின்னர் தனது ஆதரவாளர்கள் புடை சூழ வந்த எதிர்க்கட்சித் தலைவரும் வேட்பாளருமான மாய் கிபாக்கியும் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.



கியூபா ஆர்ப்பாட்டத்தில் தேசியக் கொடியுடன் பிடல் காஸ்ரோ.

# பயங்கரவாதம் நேட்டோவின் எதிரி என்கிறார் அமெரிக்க அதிபர் புஷ்



பரகுவேக்கு வந்திறங்கிய புஷ்ஷும் அவரது மனைவியும்

வாஷிங்ரன்,நவ.21

நேட்டோ பனிப்போருக்குப் பின்னா தனது படைத்திறத்தை 'உண்மையான அச்சுறுத்தல்'களுக்கு எதிராகவும் 'உலகப் பயங்கரவாதத்'துக்கு எதிராகவும் போராடுவதற்காகக் குவிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது. நேட்டோவின் எதிரி ரஷ்யா இல்லை; அதன் எதிரி உலகப் பயங்கரவாதிகளே. அவர்கள் சுதந்திரத்தை வெறுப்பவர்கள். சுதந்திரத்தின் பெயரால் அந்த எதிரியை தோற்கடிக்கும் பணிகளை நாம் மேற்கொள்ளமுடியும்''.

- இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

பெரகுவேயில் இன்று ஆரம்பமாகவுள்ள நேட்டோ மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்துள்ள அதிபர் புஷ் அங்கு நேற்று செக் குடியரசின் அதிபர் வக்லாவ் ஹவெல்லைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் விடயத்தில் அமெரிக்காவின நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக நேற்று புதன்கிழமை நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தினார்.

புஷ்ஷின் பேச்சு பெரும்பாலும் ஈராக்கிற்கு எதிரான போர் பற்றியதாகவே இருந்தது. ஈராக்கிற்கு எதிரான போரில் இணைந்து கொள்வது குறித்து ஒவ்வொரு நாடும் முடிவு செய்யட்டும் என்று அப்போது புஷ் குறிப்பிட்டார்.

சதாம ஹுஸைன் உலக அமைதிக்கு அச்சுறுத்தலானவர் என்ற தனது கருத்தை மீண்டும் வலியுறுத்திய புஷ், உலக நாடுகள் கூட்டுச் சேர்ந்தால் சதாமிடம் இருந்து கண்டிப்பாக பயங்கர ஆயுதங்களைக் களையமுடியும் என்றார்.

முன்னதாக, பெரகுவேக்கு வந்த அதிபர் புஷ் கருத்துத் தெரிவிக்கையில், ஈராக்குக்கு எதிரான போரில் நேட்டோ அமெரிக்காவுடன் இணைந்து கொள்ளும் என்று தான் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

இன்று ஆரம்பமாகும் நேட்டோ மாநாட்டில் 'உலக பயங்கரவாதம்' மற்றும் ஈராக்குக்கு எதிரான போர் என்பன பற்றியே முக்கியமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேட்டோவில் இணைவதற்கு கொள்கையளவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் சோவியத் நாடுகள் 7இன் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர். ஆனால், இவர்கள் சம்பிரதாயபூர்வமான பார்வையாளர்களாக மட்டுமே இருப்பார்கள். நேட்டோவை விஸ்தரிப்பது



செக் அதிபருடன் புஷ்.

குறித்த 1949ஆம் ஆண்டுக் கொள்கைக்கு ஏற்பவே இந்த 7 நாடுகளும் நேட்டோவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன. எதிர்வரும் 2004ஆம் ஆண்டளவில் இந்த நாடுகள் நேட்டோவில் உத்தியோகபூர்வமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

(ம)

# அமெரிக்காவுக்கு எதிராக கியூபாவில் ஆர்ப்பாட்டம்!

## லட்சக்கணக்கில் மக்கள் பங்கேற்றனர்

ஹவானா,நவ.21

கியூபாவில் இருந்து சரக்கு விமானம் ஒன்றில் தப்பிச்சென்று அமெரிக்காவில் தரையிறங்கிய 8 கியூபர்களைத் தமது நாட்டுக்குத் திருப்பியனுப்ப வேண்டும் என்றுகோரி பல லட்சக்கணக்கான மக்கள் தலைநகர் ஹவானாவிலுள்ள அமெரிக்கன் மிஷன் அலுவலகத்துக்கு வெளியே பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

கியூப அதிபர் பிடல் காஷ்ரோவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார். வழமையான தனது ஒலிவ் பச்சைநிற சீருடை மற்றும் தொப்பி அணிந்தபடி அவர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்திருந்தார். பாடசாலை சீருடையில் மாணவர்கள், தொழிலாளர்கள், இராணுவ உதவிப் படையினர் என்று வயது வேறுபாடின்றிப் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். நீலமும் வெள்ளையும் கலந்த கியூப தேசியக் கொடியையும் அவர்கள் தமது கைகளில் ஏந்தியிருந்தனர்.

"நாங்கள் இங்கு தீவிரவாதத்துக்கு எதிராகவும் அமெரிக்க அரசாங்கத்தின் பொய்களுக்கு எதிராகவும் எமது கருத்தைத் தெரிவிப்பதற்காகக் கூடியுள்ளோம்" - என்று 18 வயதான மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

1966இல் உருவாக்கப்பட்ட அமெரிக்கச் சட்டப்படி கியூப நாட்டின் பிரஜை ஒருவர் அமெரிக்க மண்ணில் காலடி வைத்தால், அவருக்குச் சார்பான - சாதகமான போக்கை அரசு கடைப்பிடிக்கவேண்டும். இதனடிப்படையில் அமெரிக்காவுக்குள் விரோதமாக நுழையும் கியூப பிரஜைகள் எவரையும் அமெரிக்கா திருப்பியனுப்புவது இல்லை.

2000ஆம் ஆண்டில் இத்தகைய புகழ்பெற்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அமெரிக்காவுக்குச் செல்ல முயன்றசமயம், படகு கவிழ்ந்து தாய் உயிரிழக்க மீட்கப்பட்ட சிறுவன் எலியன் தொடர்பாக இது நடந்தது.

கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் சிறுவன் எலியன் கியூபாவுக்குக் கொண்டுவரப்பட்டான்.

(ம)

# இஸ்ரேல் எதிர்க்கட்சிக்கு புதிய தலைவர் தெரிவு



மிட்சனா

இஸ்ரேலிய எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் புதிய தலைவராக தற்போது ஹைபா நகர மேயராக இருக்கும் அம்ராம் மிட்சனா (வயது 57) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் பாதுகாப்புத்துறை அமைசசரும் தொழிற்கட்சித் தலைவருமான பெஞ்சமின் பென் - எலிஸரை விட 17சதவீத அதிக வாக்குகளைப் பெற்று அவா வெற்றி பெற்றார். அவருக்கு ஆதரவாக 54சதவீத வாக்குகள் பதிவாகியதாகத் தெரிவிக்கப்பட்டது. பெஞ்சமின் பென் - எலிஸருக்கு 37சதவீத வாக்குகள் கிடைத்தன. முன்னாள் அமைச்சர் ஹைறம் ரமோன் மூன்றாவது இடத்தைப் பெற்றார். அவருக்கு 7சதவீத வாக்குகள் கிடைத்தன.

எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு கட்சியை வழிநடத்துவதற்கான புதிய தலைமையைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது.

சரிந்து செல்லும் கட்சியின் செல்வாக்கை நிமிர்த்தும் பெரும் பொறுப்பு புதிய தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மிகக் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் அவர் இதனைச் செய்து முடிக்கவேண்டும்.

பலஸ்தீன விவகாரத்தில் அதிக அனுபவம் உடையவரான அம்ராம் மிட்சனா இஸ்ரேல் பலஸ்தீன விவகாரத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்து அரசியல் ரீதியான அணுகு முறையை கடைப்பிடிக்கக் கூடும் என்றும் கருதப்படுகின்றது.

(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரஞ்சித், 54, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (10792)

டோமன் பிஞ்சர் நாய்க்குட்டிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண பாடசாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (தொடர்பு நேரம்: காலை 11-12.30 வரை, மாலை 4.00 - 6.00 வரை) (10688)

RX 100 YAMAHA மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr.T.சங்கர், இல.566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2486. (C/24981)

## காணவில்லை

சிவப்பு நிறமான குறியற்ற பசுமாடொன்று (15-11-2002) வெள்ளிக் கிழமைமுதல் நவாலிப் பகுதியில் காணவில்லை. இது பற்றிய விவரம் தெரிந்தவர்கள் S.மார்க்கண்டு, நவாலி (சிந்தாமணி விநாயகர் ஆலயம் அருகில்) எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10795)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,நவ.21

தொண்டமானாறு சந்நிதியான் சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளி தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.குமாரவேல் "பகவத் கீதை" தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். இதன் அறிமுகவுரையை தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலய பகுதித் தலைவர் கு.ரவீந்திரன் நிகழ்த்துவார். (ஓ-135)

## ரணிலின் அதிகாரங்களை பறிக்கத் திட்டமாம்!

கொழும்பு,நவ.21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அரசமைப்பு ரீதியாக அதிகாரங்களை இழக்கச் செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டு வருவதாக "ராவய" சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

இது தொடர்பான திட்டம் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் -

அது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் -

அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

ஐ.தே.கட்சியின் யாப்பின்படி நாட்டின் ஜனாதிபதி பதவி தமது கட்சியிடம் இருக்கும்போது அல்லது அந்தப் பதவி எதிர்க்கட்சி வசம் இருக்கும்போது பிரதமராகப் பதவி ஏற்கும் ஒருவர் தானாகவே அக்கட்சியின் தலைவர் ஆகுவார். எனவே ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அப்பதவிக்கு வேறு ஒருவரை நியமித்தால் அவரே ஐ.தே.கட்சியின் தலைவராவார்.

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட திட்டத்துக்கு இந்த விதியே அடிப்படையாக அமைந்துள்ளது.

- இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஓ)

## மயான கிணற்றை புனரமைக்க கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.21

மாசியப்பிட்டி இந்து மயானத்தில் உள்ள கிணற்றை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த மயானத்தில் இறுதிக்கிரியைகளுக்கும் பிதிர்க்கடன்களை நிறைவேற்றவும் பயன்படும் கிணறு பாழடைந்து போயுள்ளது. இதனைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமீபத்தில் பண்டத்தரிப்பு பட்டின பொது நூலகத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் கலந்துரையாடல் கூட்டத்திலும் இவ்விடயம் பற்றி மாசியப்பிட்டி சனசமூக நிலையத்தினரால் எடுத்துக்கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-135)

---

## மீன்பிடி வள்ளம் விற்பனைக்குண்டு

32 அடி நீளம், தும்புக் கண்ணாடி இழை
H.R.41 H.P. லிஸ்டர் இயந்திரம் (ஸ்ராண்டட் தரம்)
கொண்ட மீன்பிடி வள்ளம் விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*

**வ.நவரத்தினம்,**
இன்பருட்டி, பருத்தித்துறை. (10735)

---

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய
விஞ்ஞானமன்ற வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசு பெறும் இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு இல . | - | 3578 |
| இரண்டாம் பரிசு இல . | - | 1979 |
| மூன்றாம் பரிசு இல. | - | 1901 |

பரிசுக்குரியவர்கள் தங்கள் சீட்டுக்களைச் சமர்ப்பித்து 25.11.2002 ஆம் திகதிக்கு முன் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(10785) - விஞ்ஞான மன்றம்.

---

## யாழ்.பல்கலைக்கழகம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

மர/உருக்குத் தளபாடங்கள் வழங்கல்

யாழ்.பல்கலைக்கழகத்திற்குக் கீழ்வரும் மர/உருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | காரியாலய மேசை | 16 |
| 2. | உயர் அதிகாரிகள் மேசை | 09 |
| 3. | கைக் கதிரைகள் | 09 |
| 4. | விரிவுரை மண்டபக் கதிரைகள் | 100 |
| 5. | உருக்கு ராக்கை | 50 |
| 6. | கற்கை போட் | 50 |
| 7. | தேநீர்ச்சாலை மேசை | 26 |
| 8. | தேநீர்ச்சாலை கதிரைகள் | 24 |
| 9. | கட்டில்கள் | 20 |
| 10. | உருக்கு புத்தக ராக்கை | 16 |

கேள்விப்பத்திரதாரர், மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 500/-உம், மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 5000/-உம் நிதிக் கிளையில் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், நிதியாளருடன் தொடர்புகொண்டு, கேள்விப்பத்திர ஆவணங்களை 28.11.2002ஆம் திகதி தொடக்கம் 05.12.2002ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் *நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி* என முகவரியிடப்பட்டு 13.12.2002 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படவேண்டும்.


கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் *மர/உருக்குத் தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரம்* எனக் குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் சமுகந்தரலாம்.

(C/24950)

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 01 - 1943

உதிர்வு 02 - 12 - 2001

### அமரர் துரையப்பா நவரட்னம்

*(முனீஸ்வரன் கராஜ், உரிமையாளர்)*

*திதி: 21.11.2002*

"அன்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
காலமெல்லாம் எமக்காகக் கற்பூரமாய்
உமைக் கரைத்து நாமெல்லாம்
நல்வாழ்வு வாழ நாடி நின்ற எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
"அப்பா" என்று ஆசையுடன் அழைத்து மகிழ
எமக்கு உறவு ஒன்றில்லையே! எமை
கண்ணீரில் கரைய வைத்துச் சென்றதேனோ?

*இல.11, 2ஆம் குறுக்குத்தெரு,*
*சொர்ழம்புத்துறை.* (10796) - குடும்பத்தினர்.

---

## நினைக்க... நினைக்க... நெஞ்சம் வேகுதே...!

### அன்பு நண்பனே!

இன்றுபோல் இருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஜொலிஸ்ரார் ஸ்போட்ஸ் கிளப் என்பனவற்றிற்கு கோல்காப்பு வீரராகச் சேவைசெய்து வெற்றிகள் பலவற்றிற்கு வழிவகுத்தீர்...!
இன்று எம் எல்லோரையும் அழவிட்டு எங்குசென்றீர்...?

## நடேசபிள்ளை சிறீதரன்

லண்டனில் இவ்வுலக வாழ்வை நீத்தாலும்
என்றென்றும் எம்மனதில் அகலா இடம் பெற்றுவிட்டீர்!
அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும்
அவரது துணைவியாருக்கும்
அன்னாரது குடும்பத்தாருக்கும்
நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்கள்.

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் விளையாட்டு வீரர்கள்.

(C/24975)

---

## தனியார் பாதுகாப்புச் சேவை

### பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

01-01-2003 தொடக்கம் 31-12-2003 வரையான காலப்பகுதிக்குத் தனியார் பாதுகாப்புச்சேவை வழங்குவதற்குப் பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/- வைத்தியசாலையில் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 30-11-2002 காலை 10.00 மணி ஆகும்.

1. அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பதிவுச் சான்றிதழ்.
2. சேவை முன்அனுபவம்
3. நிதி நிலைத் தகைமை (6 மாத கால வங்கிப்பற்றும், வருமானவரிப்பற்றுச் சீட்டும்).
4. மேலதிக விவரங்களை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி திரு.எஸ்.சதுர்முகம்
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-24976)

---

## UNIVERSITY OF JAFFNA

### TENDER NOTICE

**SUPPLY OF STEEL/FILING CABINETS**

Sealed Tenders are invited from reputed Suppliers for the following.

1. Steel Cabinets - 12 nos. (22 swg)
2. Filing Cabinets - 19 nos. (22 swg)

All Tenderers are required to pay a non refundable, Tender fee of Rs. 500/=, by money order drawn in favour of the University of Jaffna, Payable at the Jaffna Post Office or by cash at the Shroff Counter of the University of Jaffna. Relevant document to be attached with the Tender.

The University may on its discretion either increase or decrease the number of items to be purchased. If any special discount allowed to the University should also be indicated. The Successful Supplier should be prepared to deliver these at the University of Jaffna and extend one-month credit facility. After confirmation of the order, supply should be completed within two weeks.

Tenders should be sent under registered cover to the *Bursar, University of Jaffna, C/o. Jaffna Co-operative Stores Ltd., EG 4 Central Road, Colombo - 12 or Thirunelvely, Jaffna,* On or before -04.12.2002 at 2.00p.m., marked ***"Tenders for Steel/Filing Cabinets"*** at the top left hand corner of the envelope.

**Registrar,**
*University of Jaffna.*

(C/24893)

உதயன்

## வடக்கு, வடமேற்கு, தெற்கு குழப்பங்கள்!

வடக்கிலும் வடமேற்கிலும் தெற்கிலும் ஒரே குழப்ப நிலை.

இதனால் நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் கலங்கிப்போய் இருக்கிறார்கள். பலர் நேரடியாகப் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

நெடுந்தீவு உட்பட தீவுப்பகுதி முழுவதையும் ஒரு காலத்தில் தமது இரும்புப் பிடியில் வைத்திருந்த ஈ.பி.டி.பியினர், தவிர்க்கமுடியாத நிலையில் அங்கருந்து வெளியேறிவிட்டு இப்போது பொலீஸ் மற்றும் படையினரின் பாதுகாப்போடு இரவோடு இரவாக அரவம் இல்லாமல் நெடுந்தீவில் மீள்பிரவேசம் செய்ததால்தான் வடக்கில் குழப்பநிலை.

நெடுந்தீவு மக்களோ, தமது தீவில் ஈ.பி.டி.பியினர் மீண்டும் கால் பதிக்கக்கூடாது என்று போராட்டம் நடத்திவருகிறார்கள்.

நெடுந்தீவு மக்கள் ஆரம்பித்த போராட்டத்தில் குடாநாட்டு மக்கள் அனைவரும் பங்குகொள்ளும அளவுக்கு நிலைமை இப்போது வளர்ந்துவிட்டது. நேற்று யாழ்நகரில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன.

நெடுந்தீவில் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. மக்களின் விருப்பத்தைக் கருத்திறகொள்ளாமல், தாம் அங்கிருந்து எக்காரணம் கொண்டும் வெளியேறப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் ஈ.பி.டி.பியினர்.

அதை மக்கள் சவாலாக ஏற்றுத் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

வடக்கில் அப்படியென்றால் வடமேற்கில் கூடுதலான பரிமாணத்தில் கொந்தளிப்பு. இரு சமூகங்களைப் பிழிந்தெடுக்கிறது.

இந்தமாத ஆரம்பத்தில் கொழும்பு மாளிகாவத்தையில் முஸ்லிம் அறநெறிப் பாடசாலைக் கட்டட விஸ்தரிப்பு தொடர்பாக நடைபெற்ற மோதல்களும, உயிரிழப்பும், அழிவுகளும் அனைவரும் அறிந்தவையே.

மாளிகாவத்தைச் சம்பவத்தின் மறுபதிப்பாகவே வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள மதுரங்குளியில் மோதல்கள் நடந்தன.

வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த இரு ஓட்டோ சாரதிகளுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் அடிதடியாக மாறி அவர்கள் சார்ந்த சமூகத்தவர்களை மோதவைத்துவிட்டது. அதனால் எவ்வளவு அழிவு! இறை இல்லம் ஒன்று எரியூட்டப்பட்ட மிகவும் சோகமான சம்பவமும் நடந்திருக்கிறது.

மதுரங்குளிக்கு சமீபமாகவுள்ள சிறிமாபுரத்தில அகதிகள் குடியமர்ந்திருக்கிறார்கள். குண்டர்கள் அங்கும் சென்று தமது கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள்.

தெற்கில் காலி, கட்டுக்கொடைப் பகுதியில் வெடித்த வன்செயல்களிலும் ஓட்டோ ஒன்றுதான சம்பந்தப்பட்டிருக்கிறது. ஒரு பெண்மணி ஓட்டோ ஒன்றினால் மோதப்பட்டுவிட்டார். அதனால் ஏற்பட்ட வாக்குவாதமே சமூகங்களுக்கிடையே மோதல்களை முடுக்கிவிட்டது.

பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் அளவிற்கு நிலைமை மோசமாகியது. ஒருவர் பலியாகிவிட்டார்; பலர் காயமடைந்திருக்கின்றனர்.

மதுரங்குளிப் பகுதியிலும் காலி, கட்டுக்கொடைப் பகுதியிலும் பொலீஸார், அதிரடிப் படையினர், இராணுவத்தினர் ஆகியோர் ஊரடங்கைப் பிரகடனப்படுத்தி துரிதமாகத் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கியதாலேயே கலவரங்கள் வேறு இடங்களுக்கும் பரவாமல் இந்தமட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சமாதான முயற்சிகளுக்கு எதிரான தீய சக்திகளும் விஷமிகளும் இன்னும் ஓய்ந்துவிடவில்லை என்பதையே நடைபெற்றுவரும் இந்த சம்பவங்கள் காட்டுகின்றன.

குழப்பத்தை ஏற்படுத்தத் தருணம் பார்த்துக் காத்திருப்பவர்கள், வாய்ப்பான சம்பவங்கள் ஏதாவது நடந்துவிட்டால் அதை வைத்தே மக்களின் இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு காரியம் சாதிக்க முனைகிறார்கள்.

அவர்கள் எந்த மட்டத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து தண்டனைக்கு உள்ளாக்கவேண்டியது பாதுகாப்புப் படையினரின் தலையாய கடமையாகும்.

சம்பவங்களுக்கு அவர்களின் ஒரு பகுதியினரே தூண்டுகோலாக இருந்தால் அவர்களை அரசு ஈவிரக்கமின்றி "கவனிக்க" வேண்டும்!

# விமானப் பயண சோதனை நிலையம் விரைவில் கட்டுவனுக்கு மாற்றப்படும்

யாழ்ப்பாணம்,நவ.21

குடாநாட்டில் இருந்து விமானம்மூலம் பயணம் மேற்கொள்பவர்களுக்கான சோதனை நிலையத்தை கட்டுவன் முன்னரங்க நிலைக்கு அரைக் கிலோமீற்றர் தூரத்தில் அமைக்கப் படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ்பபாணத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பலாலியில் கூட்டிய மாநாட்டிலேயே இந்த இணக்கம் ஏற்பட்டது.

இந்த மாநாட்டில் விமானப் படைத் தளபதி, சிவில் விமானப் போக்குவரத்துத் துறைத் தலைவர் நிமால் ஹேமசிறி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, செரண்டிப் விமானச் சேவையின் யாழ்.முகவர் எஸ்.மனோகரன், எக்ஸ்போ விமானசேவையைச் சேர்ந்த எஸ்.ஜெராஸ்ட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பயணிகள் எடுத்துச்செல்லும் பொருள்கள் மீதான சோதனைகள் மற்றும் பயணச் சீட்டுப் பரிசீலனை ஆகிய பணிகள் தற்சமயம் யாழ்.சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறுகின்றன. இதற்காக பயணிகள் வெகுநேரம் முன்னதாகவே சிங்கள மகா வித்தியாலயத்தின் முன்பாக சமுகமளிக்க வேண்டியுள்ளது.

விமான நிலையத்துக்கு சமீபமாக சோதனை நிலையத்தை அமைத்தால் பயணிகள் விமானம் புறப்படுவதற்கு சொற்ப நேரத்துக்கு முன்னர் அங்கு சென்றால் போதுமானதாகும்.

இதற்கு வசதியாக கட்டுவன் முன்னரங்க நிலைக்கு சமீபமாக பயணிகளுக்கான சோதனை நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று விமான சேவைகளின் பிரதிநிதிகளான மனோகரனும், ஜெரால்ட்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

இதை ஏற்றுக்கொண்ட பாதுகாப்பு அமைச்சர், கட்டுவன் முன்னரங்க நிலையில் இருந்து அரைக் கிலோமீற்றர் தொலைவில் சோதனை நிலையத்தை அமைக்க அனுமதி வழங்கினார்.

இந்த சோதனை நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் அங்கு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று செரண்டிப் விமான சேவை முகவரான மனோகரன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-3)

# யாழ்.மாவட்டம் கஷ்டப் பகுதியாக அங்கீகரிக்கப்படக் கோரிக்கை!

## அமைச்சருக்கு அதிபர்கள் சங்கம் கடிதம்

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகக் கணிக்கப்படவேண்டும் - இவ்வாறு மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சரிடம் வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சருக்கு மேற்படி சங்கம் இது தொடர்பாக அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'உள்நாட்டு கல்வி வளத்தை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை அதிபர்கள் வெளிநாடுகளில் பயிற்சிபெற அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

'இந்தப் பயிற்சியில் பங்கேற்பவர்களை தெரிவுசெய்ய வடக்கு-கிழக்கு மாகாணசபையால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.' அதில் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கு 40 புள்ளிகள் விசேடமாக வழங்கப்பட்டன. யாழ்ப்பாண பாடசாலைகள் கஷ்டப்பிரதேச பாடசாலைகளாக அங்கீகரிக்கப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணப் பாடசாலை அதிபர்களாகிய நாங்கள் பாதிக்கப்படுகிறோம்.

'யாழ்ப்பாணம் யுத்தப் பிரதேசமாக இருந்தது. ஒன்று இரண்டு வருடங்கள் அல்ல; சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக யாழ்.பிரதேசம் யுத்த பூமியாகவே இருந்து வந்தது. அப்போது அங்கு பணியாற்றிய அதிபர்கள் போக்குவரத்து வசதியீனங்கள் உட்பட பல கஷ்டங்களின் மத்தியிலும் தமது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றினர்.

'அந்தவகையில், யாழ்ப்பாணப் பிரதேசமும் கஷ்டப் பகுதியாக கணிக்கப்படவேண்டும். இதன்படி யாழ். பாடசாலை அதிபர்களுக்கு குறிப்பிட்ட 40 புள்ளிகள் வழங்கப்படவேண்டும். பதவியுயர்வு, புலமைப்பரிசில் வழங்கல் போன்ற விடயங்களிலும் இதே நடைமுறை பின்பற்றப்படவேண்டும். அத்துடன், கடமையினூடான சாதனைகளுக்கென வழங்கப்படும் 5 புள்ளிகளும் அதிகரிக்கப்படவேண்டும்.

'இந்த விடயங்களைப் பரிசீலித்து எமது குறைகளை நிவர்த்தி செய்வீர்களென நம்புகிறோம்' - என்றுள்ளது. (ஒ)

### ஆசிரியர்களின் தாமதத்தைத் தடுக்க

# கல்விக் கோட்ட அலுவலகத்தை வடமராட்சி கிழக்கில் இயக்குக

## பெற்றோர் கோரிக்கை

வலி.வடக்கு,நவ.21

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீள இயங்கத் தொடங்கியுள்ள பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர்கள் தாமதமாகப் பணிக்கு வருவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றபோதிலும் ஆசிரியர்கள் உரிய நேரத்திலும் பார்க்க மிகவும் தாமதமாகவே பணிக்கு சமுகமளிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி அலுவலகம் இடப்பெயர்வைத் தொடர்ந்து மந்திகையில் இயங்கிவருகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதிப் பாடசாலைகளை கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கண்காணிப்பதும் அரிதாகவே உள்ளது.

தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாடு அடையவேண்டுமாக இருந்தால் மந்திகையில் இயங்கும் வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்ட அலுவலகம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கவேண்டும் என்று மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-86)

### பருத்தித்துறை - நாகர்கோவில்

# வீதி திறப்பது குறித்து ஆராயும் குழுவின் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,நவ.21

பருத்தித்துறை - நாகர்கோவில் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறப்பதற்கான சாத்தியம் குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழு இன்று காலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் கூடவிருக்கின்றது.

முகமாலையில் கடந்த 16ஆம் திகதி பாதுகாப்பு விவகாரங்களுக்கான உபகுழு கூடிய சமயம் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

நாகர்கோவில் - பருத்தித்துறை வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தனர்.

இந்த விவகாரம் குறித்து ஆராய படை அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் குழுவின் கூட்டமே இன்று இடம்பெறவுள்ளது. (ஒ-3)

### நாளை

கார்த்திகை 06
வெள்ளிக்கிழமை
(22.11.2002)
திதி : துதியை
முற்பகல் 9.49 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முன்னிரவு 11.15 வரை.
சுபநேரம் : 6.10 - 7.40
ராகுகாலம்: 10.40 - 12.10
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு நல்ல பெண்ணின் காலடியில் வஞ்சகரின் போலிப் பழிச்சொற்கள் மடிகின்றன.

# அரும்பொருள் கடத்தலில் இடைத்தரகர்கள் ஈடுபாடு!

குடாநாட்டிலிருந்து அரும்பொருள்கள் இடைத்தரகர்கள் உதவியுடன் தொடர்ந்தும் தென்பகுதிக்குக் கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டிலிருந்து அரும்பொருள்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும், யாழ். குடாநாட்டிலிருந்து அரும்பொருள்கள் விலைக்கு வாங்கப்பட்டு தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

குறிப்பாக வண்ணார்பண்ணை, கொக்குவில், தாவடி மற்றும் அச்சுவேலி போன்ற பகுதிகளைச் சேர்ந்த சிலர் அரும்பொருள் கடத்தலுக்கு இடைத்தரகர்களாகச் செயற்படுவதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள மரக்காலைகள் சிலவற்றின் உரிமையாளர்களும், உலோகப் பொருள்களை தயாரிப்போர் சிலரும் அரும்பொருள்கள் கடத்தலில் தென்பகுதி வியாபாரிகளுக்கு உதவுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவர்கள் அரும்பொருள்கள் இருக்குமிடங்கள் பற்றிய தகவல்களைத் தென்பகுதி வியாபாரிகளுக்குத் தெரிவிக்கின்றனர். சிலசமயங்களில் திருடி வரப்படும் அரும்பொருள்களை இவர்கள் வாங்கி வைத்திருந்தும் பின்னர் தென்பகுதி வியாபாரிகளுக்கு வழங்குகின்றனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை சமூகநலனில் அக்கறையுள்ளோர் விரைந்து மேற்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

# கிளிநொச்சி நகரில் தொலைபேசி 'எக்சேஞ்'

## அமைக்கும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி,நவ.21

கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்காகத் தனியான பரிவர்த்தனை நிலையம் ஒன்றை கிளிநொச்சி நகரப்பகுதியில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பண்ணையில் உள்ள பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து கிளிநொச்சி நிலையத்துக்கு தொடர்புகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

அங்கு அமையும் தனியான பரிவர்த்தனை நிலையம் ஊடாக 60 இணைப்புக்கள் வழங்கமுடியும் என்றும் -

முதற்கட்டமாக 21 இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன என்றும் -

எஞ்சிய இணைப்புக்கள் படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

'ரெலிகொம்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இணைப்பு கேபிள்களை பொருத்துவதற்கான தூண்கள் அமைக்கும் பணி தற்சமயம் இடம்பெறுகிறது. பெரும்பாலும் அடுத்த மாத முற்பகுதியில் இணைப்புக்கள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

முளுநந்துயரால் முடிவிலா இடர் சுமக்கும்

# இரண்டாவது ஆண்டு நினைவலைகள்

- யாழ்./ சாவ. இந்து ஆரம்ப பாடசாலை முன்னாள் உபஅதிபர்
- பிரபல இலங்கைப் பத்திரிகைகளின் புகழ்பூத்த செய்தியாளர்
- சாவ. - ப.நோ.கூ.ச. முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர்
- சாவ. - இந்து தேசிய பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்
- வாழ்வாங்கு வாழ்ந்து வாழும் நெறி புகட்டிய பிரபல சமூகசேவையாளர்

மகிழ 17 - 09 - 1921



நெகிழ 22 - 11 - 2000

# அமரர் அருணாசலம் ஆறுமுகம் (ஜே.பி.)

(மார்க்கண்டு வாத்தியார்)

## திதி - கார்த்திகை அபரபக்க ஏகாதசி 30-11-2002

இடம்பெயர்ந்து வாழ்ந்தின்று இல்லம் வந்தடைந்தோம்!
இனியஐயா உங்களைத்தான் இடப்பெயர்வில் பிரிந்து வந்தோம்!
படம்வைத்து வீட்டினிலே பதறியேங்கி அழுகின்றோம்!
பாசமனை யெங்கணுமே உம்வதனம் தேடுகிறோம்
தடம்பதித்து நடந்தநிலம் தந்தையே யும்மையெண்ணி
தலைசாய்த்து அழுகிறதே தத்துவமே வாரீரோ?
நடமாடுந் தெய்வமென நாடுபுகழ வாழ்ந்தவரே!
நடந்தீரோ ஐயாநீர் நலிகின்றோம் பிரிவுன்னி!

இதயத்தால் போற்றிநீர் இதஞ்செய்து அரவணைத்த
இந்துக் கலையகமும் இன்று சொந்த இடம்வாழும்!
அதர்மத்தை அடக்கி நல்ல அறிவூட்டி வழிகாட்டும்
அன்பரே நீரமட்டு அகன்றீரோ அவனிவிட்டு
உதயத்து நிலவேயெம் உயிர்கலந்த ஐயாவே!
ஓடியதோ ஈராண்டு உருகுகின்றோம் உமையெண்ணி
நிதமிந்த மண்ணதிலே நீளுமுங்கள் புகழ்வாழும்
நிமலன் திருவடிக்கீழ் நிறைவுகொள்க அஞ்சலித்தோம்!

★ அன்புத் தந்தைக்கு அடிபணிந்து அஞ்சலித்தோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
*T.P.: 070 212832*

- குடும்பத்தவர்.

(10739)

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை 1978இல் அங்கீகரித்தது ஜே.வி.பி.!

## எடுப்பார் கைப்பிள்ளையாக இன்று அது மாறியது வேதனைக்குரியது

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடதுசாரிகளின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அடிப்படைக் கொள்கை தடுமாற்றத்தால் - நிகழ்ந்துவந்துள்ளன.

சமத்துவமும் சகோதரத்துவமும் பேசிய சமசமாஜிகள் - ஒரு மொழியெனில் இருநாடு - இருமொழியெனில் ஒரு நாடு என்றவர்கள், 1956ஆம் ஆண்டு ஆனிமாதம் 5ஆம் நாள் நாடாளுமன்றத்தில் பிரதமர் பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

அத்தகைய சமசமாஜிகள் பொதுவுடைமைக் கட்சியினர் எல்லாம் 1970ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்திற்குச் சரணாகதியடைந்து அமைச்சர் பதவிகளை ஏற்றுச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு இணைந்தார்கள்.

கலாநிதி என்.எம்.பெரேரா வங்கியாளரின் வேலைநிறுத்தத்தை, மிருகத்தனமாக அடக்கி, அது காலவரை தங்களை வாழவைத்த, வளர்த்த தொழிலாளர்களின் காலையே வாரினார்.

1972ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியால் உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பை வரைந்தவர் சமசமாஜ கட்சியின் தலைவர்களில் ஒருவரானவரும் - 'ஒரு மொழியென்றால் இருநாடு - இருமொழி என்றால் ஒரு நாடு' என அமரர் பண்டாரநாயக்காவை எச்சரித்தவருமான இடதுசாரி கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவே.

அவரின் உதட்டில்தான் சமத்துவம் உதித்ததேயொழிய உள்ளத்தில் அவர் ஒரு பேரினவாதியாகவே இருந்தார்.

### கோடீஸ்வரன் வழக்கு

1956ஆம் ஆண்டு அமரர் பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து, தமிழ் எழுவினைஞர் சங்கம் சார்பில் கோடீஸ்வரன் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கில் சோல்பரி அரசியல் திட்டத்தின் 29ஆவது விதிப்படி அதாவது இலங்கையில் வாழும் சிறுபான்மையோரை மத, இன, மொழி அடிப்படையில் பாதிக்கக்கூடிய சட்டங்களை நாடளுமன்றம் இயற்றக்கூடாது என்ற பொருள்பட அமைந்த விதியின் படி, 'தனிச் சிங்களம் மட்டும் சட்டம்' அரசியல் யாப்புக்கு பிழையானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனால், வெருண்ட சிங்களத் தலைவர்களில் சமசமாஜிகளும் பொதுவுடைமைவாதிகளும் உள்வாங்கப்பட்டார்கள்.

அந்த நிலையைத் தவிர்க்கவே 1972ஆம் ஆண்டு அவசர அவசரமாக குடியரசு அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் யாப்பை ஓரிரு தமிழ்க் காங்கிரஸ் காரர்களைவிட பெரும்பான்மையான தமிழர்கள் எதிர்த்தார்கள்.

தமிழர்கள் தங்களின் ஆறு அம்சக் கோரிகையை அன்றைய பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் கையளித்தார்கள்.

பாரதப் போருக்குமுன் துரியோதனிடம் கிருஷ்ணன் பாண்டவருக்காக தூது சென்று நாடு கேட்டு அது கிடையாததால், ஐந்து கிராமம் கேட்டு அதுவும் கிடைக்காததால், ஐந்து வீடு கேட்டதுபோலவே தமிழர்கள் தங்கள குறைந்தபட்சக் கோரிக்கையை அரசிடம் கையளித்தார்கள்.

அதை ஸ்ரீமாவோ ஏற்றுக்கொண்டு ஆறு அம்சக் கோரிக்கையை அரசியல் யாப்பில் சேர்க்குமாறு டாக்டர் கொல்வினிடம் கேட்டார்.

இது சோல்பரி அரசியல் திட்டத்திலிருந்து ஆப்பை எடுத்து பொல்லைப் புகுத்திய கதையாகிவிடும் எனக் காரணங்காட்டித் தட்டிக்கழித்தவர் கொல்வின்.

எனவே, ஆரம்பகால இடதுசாரிகள் பின்னர் இடைக்காலத்தில் பேரினவாதிகளாக பரிணாம வளர்ச்சி கண்டார்கள் என்பது இலங்கை வரலாற்றில் திரிபுபடாத உண்மையாகும்.

மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமட்டுமே இடதுசாரி போர்வை போர்த்தியவர்கள் புலிகள் - மக்கள் செல்வாக்கைப் பெற்றதும் பேரினவாதியாகவே மாறிவிடுகிறார்கள்.

இது இம்மண்ணின் விசேடம் போலும். அதிகாரப் பரவலாக்கலைப் பற்றிப் பேசிய வாசுதேவ நாணயக்காரகூட தற்போது ஒற்றையாட்சிக்குள் தீர்வைப் பற்றி குரல்கொடுப்பது காலத்தின் கோலமாகும்.

### பௌத்த சமயம்

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் திட்டத்தில் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கியமை பாரிய விளைவுகளைத் தந்துள்ளது. தமிழர்கள் பிரிந்து செல்வது பற்றிச் சிந்திக்கப் பாதை அமைத்த நிகழ்வு இதுவேயாகும்.

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு சிங்கள பௌத்தர்களை மட்டுமே திருப்திப்படுத்தியது. 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பையும் ஜே.ஆர். அந்த அடிப்படையிலேயே உருவாக்கினார்.

பேரினவாத அரசியல்வாதிகளால் ஒழுங்கான அரசியல் அமைப்பை உருவாக்க முடியாது. அனைத்து மக்களும் ஏற்கக்கூடிய அரசியல் அமைப்பு இலங்கைக்குத் தேவை என சிங்கள பௌத்த கலாநிதி அமரசிறி சொய்சா கூறினார்.

புத்தபெருமான் மானிட வர்க்கத்தை இனம் - மதம் - குலம் என்றெல்லாம் பாகுபாடுபடுத்திப் பார்க்கவில்லை. மனிதப் பிறப்புக்கொண்ட அனைவரும் சமமாகவும் சமத்துவமாகவும் வாழவேண்டும் என்றே கூறி இருக்கிறார். தமிழர்களை ஏமாற்றிக் கொண்டு அரசியல் நடத்தச் சிங்களத் தலைவர்கள் நன்கு பழக்கப்பட்டுவிட்டார்கள்.

தமிழர்கள் வாக்குகளைப் பெறுவதற்கு மட்டும் நயமாகப் பேசி நம்ப வைத்து வாக்குகளைப் பெற்றபின் அவர்களை மறந்துவிடும் சுபாவம் பல சிங்களத் தலைவர்களிடம் காணப்படுகிறது.

### தேரர் கூறிய கருத்து

தமிழர்களை ஒதுக்கிவைப்பது தவறாகும். அவர்களுக்குச் சம உரிமை வழங்குவது விவேகமாகும். சிங்களவரும் தமிழர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள். தமிழர்களில் பலர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், பௌத்தத்துடன் தொடர்புடையவர்கள். எமது புத்த பெருமான் பிறந்து வளர்ந்த நாட்டில்கூட இந்துக்கள்தான் கூடுதலாக வாழ்கிறார்கள். அவர்கள் பௌத்தத்தை மதிக்கும்போது நாம் ஏன் இந்துக்களை நிந்திக்கவேண்டும்?

புத்தர் வாழ்ந்த காலத்திலும் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிந்தது. அப்போது காணப்பட்ட குடியேற்றங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கை வரலாற்றில் ஆரம்பத்தில் காணப்பட்ட அநுராதபுரக் கிராமம், உபதிஸ்ஸக் கிராமம், உருவெலக் கிராமம் போன்றவற்றின் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

அதிகாரம் பன்முகப்படுத்தும்போது மத்திய அரசாங்கத்திற்குக் கீழ் அமையவேண்டும். இந்நாட்டு மக்களின் பிரச்சினைக்கு இலகுவான தீர்வாக அது அமையும்.

- இவ்வாறு ஹாப்பிட்டிகம சியனே கோரளைகளின் சந்தனன்கம அத்தஸ்ஸி தேரர் சிங்களப் பத்திரிகையான ஜனதாவில் 20.07.1978இல் எழுதிய கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

பொதுவாக பௌத்த சிங்கள மக்களே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் சிந்திக்கிறார்கள்.

சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடிப்படை இலட்சியமாகக் கொண்ட இடதுசாரி போக்கானவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ளும் மட்டும் சம அந்தஸ்து சமத்துவம் பேசுகிறார்கள். வளர்ந்தபின் பேரினவாதிகளே நிமிர்ந்திருக்கிறார்கள்.

இலங்கையின் இந்த இடதுசாரிகளின் அடிப்படைத் தத்துவத்திற்கு ஜே.வி.பியும் விதிவிலக்கல்ல.

### விஜயவீர ஆதரவு

மக்கள் விடுதலையின் ஸ்தாபகரும் தலைவருமான ரோகண விஜயவீர எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

"ஏதாவது மக்கள் குழு பிரிந்து செல்வது அவசியம் என விரும்பினால், அந்த உரிமை அவர்களுக்குக் கிட்டவேண்டும். ஆகவே, தமிழ் மக்களின் பிரிந்து செல்லும் உரிமையை நாம் அங்கீகரிக்கின்றோம்."

- இவ்வாறு 1982ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி வெளிவந்த தங்கள் கட்சியின் உத்தியோகபூர்வமான வெளியீடான "நியமுவா"வில் எழுதினார்.

"வடபகுதிக்கு பயமின்றி வரக்கூடியவன் நான் மட்டுமே. நான் உங்கள் உரிமையை எதிர்த்துக கொழும்பிலிருந்து கண்டிக்குப் பாதயாத்திரை செல்லவில்லை. உங்கள் உரிமைகளை நசுக்கும் வகையில் யாழ்.நூல் நிலையத்திற்குத் தீவைக்கவில்லை. நான் உங்களுக்கு எதிராக கேணல் சேரம, கேணல் உடுகமை போன்றவர்களை அனுப்பவில்லை. இதனால், வந்தேன்; மீண்டும் வருவேன்.

- இவ்வாறு அவரே யாழ்ப்பாணத்திற்கு 1982ஆம் ஆண்டு வந்தபோது கூறினார்.

"தமிழ் மக்களுக்கு சுயாட்சி அல்லது சுயநிர்ணயத்தை நாம் அங்கீகரிக்கின்றோம். அவர்கள் பிரிந்து செல்ல விரும்பினால், அதையும் அங்கீகரிப்போம்" என்று 1978ஆம் ஆண்டு ஜே.வி.பி. தன்கொள்கைப் பிரகடனத்தில் திட்டவட்டமாகக் கூறியது.

ஆனால், சமீப காலமாக ஜே.வி.பி. கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் கொள்கை எதுவுமில்லாத அத்திபார மற்ற அடிப்படை ஸ்திரமற்ற எடுப்பார் கைப்பிள்ளையாகவே ஜே.வி.பி. இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

ரோகண விஜயவீர கொல்லப்பட்ட போது அவரின் கொள்கைகளுக்கும் கொள்ளிக்குடம் உடைக்கப்பட்டு விட்டது. இது தலைவனுக்குக் காட்டும் விசுவாசமல்ல; சேர்க்கும் கௌரவம் அல்ல; கொடுக்கும் அவமதிப்பாகும்.

### தலைகீழ் மாற்றம்

எவனொருவன் தன் தலைவனின் இலட்சியத்தை நிறைவேற்றுகிறானோ அவனே நல்ல நம்பிக்கையும் நாணயமுமிக்க தொண்டன் ஆவான். ஆனால், ஜே.வி.பியினரோ அந்த இலட்சியத்திலிருந்து தடம்புரண்டு தலைகீழாகி விட்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு 3.8.2000இல் கொண்டுவந்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை ஐ.தே.கட்சியோடு சேர்ந்து எதிர்த்தது ஜே.வி.பி. தற்சமயம் ஐ.தே.முன்னணி புலிகளோடு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அதன் செயற்பாடான நடவடிக்கைகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து எதிர்க்கிறது.

இதன்மூலம் ஜே.வி.பியினர் இலங்கை தனிச்சிங்கள நாடு என்னும் கொடூரமான சிந்தனையால் கவரப்பட்டு கடுமையும் கொடுமையும் வாய்ந்த இனவெறியர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பது தெளிவு.

இது இலங்கையின் எதிர்காலத்திற்கு மிகமிக ஆபத்தான அறிகுறியாகும்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியுள்ள ஜே.வி.பி. இலங்கையின் எதிர்காலத்திற்குப் பெரும் சவாலாகவே அமையும்.

பாம்புக்குப் பாலூட்டி வளர்ப்பதால் - அதன் இயற்கைக் குணம் மாறுவதில்லை என்பதை இருபேரினவாதச் சிங்களக் கட்சிகளும் நன்குணர்ந்துகொள்ளவேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காகவாவது இரு கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டின் பொதுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவரவேண்டும்.

ஜே.வி.பி. போன்ற பயங்கரவாத அமைப்புக்களை புறம்தள்ளி - நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்பதே இலங்கை மக்களின் விருப்பம். ☆

**பூ.ம.செல்லத்துரை**

# மனைவி, மகளின் சடலங்களுடன் வீட்டில் தங்கியிருந்த இலங்கையர்!

## மர்மக் கொலைகளால் கனடாவில் பரபரப்பு

தனது மனைவி மற்றும் மகளது அழுகிய சடலங்களுடன் ஒரு வாரத்துக்கும் மேலாக ஒரேவீட்டில் வசித்த நபரை கனேடியப் பொலீஸார் கைது செய்துள்ளனர். இலங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக



டெல்போர்ட் லோயல்

வும் கொண்ட டெல்போர்ட் லோயல் (வயது 49) என்பவரே கைதானவராவார். இவர்மீது இரு கொலைக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள மதிப்புமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் லோயல். இவர் மனைவி பற்றீசியா லோயல் (வயது43), மகள் மரிஸா லோயல் (வயது13) ஆகியோருடன் கனடாவுக்கு குடிபெயர்ந்திருந்தார். அங்கு ரொரண்டோ நகரில் வசித்துவந்தார்.

18 மாதங்களுக்கு முன்னர் பற்றீசியா பக்கவாதத்தால் பாதிப்படைந்தார். இதனால் அவரது இடது பக்கம் செயலிழந்தது. இதனால், அவர் சக்கர நாற்காலியே கதியானார்.

கனடாவில் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றீசியாவுக்கு பலனளிக்கவில்லை. ஒருமாதத்திற்கு முன்னர் பற்றீசியாவின் குடும்பத்தினர் இலங்கையிலிருந்து ஆயுர்வேத மருந்துகளை கனடாவுக்கு கொண்டு சென்று பற்றீசியாவுக்குச் சிகிச்சை அளித்தனர். ஆயினும், அவர் பழைய நிலைக்குத் திரும்பவில்லை.

இந்த நிலையில், கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக லோயல் குடும்பத்தினரை அவரது உறவினர்களால் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்களது வீட்டுக்கதவு எப்போதும் பூட்டியே இருந்தது. தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும், தொலைபேசிமணி ஒலித்ததே தவிர லோயலின் வீட்டில் தொலைபேசி எடுக்



பற்றீசியா - லோயல் திருமணத்தின்போது

கப்படவில்லை.

இதனால் சந்தேகமுற்ற லோயலின் சகோதரர் லோயலின் வீட்டுக்கதவை உடைத்துத்திறந்து உள்ளே சென்றார். வீட்டின் பிரதான படுக்கையறையில் பற்றீசியா மற்றும் மரிஸா ஆகியோரின் சடலங்கள் போர்வை ஒன்றால் மூடப்பட்டிருந்ததை அவர் கண்ணுற்றார். சடலங்களை மூடியபோர்வை மீது சிலுவை ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

உடனடியாக அவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். பொலீஸார் வந்து சடலங்களைக் கைப்பற்றினர். அதனைத்தொடர்ந்து லோயலை அவரது வீட்டுக்கு அருகிலுள்ள வீதியில் வைத்து பொலீஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வாளர் சார்ஜன்ட் மரியோ பிரொம்மாசோ கூறுகையில்:-

பற்றீசியாவும் அவரது மகளும் கடந்த 8ஆம் திகதி கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மெலிந்து சோர்வடைந்துள்ள லோயல் கொலைக்குற்றச் சாட்டுக்களுக்காக 'நோர்த் யோர்க்' நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார் என்றும்- அவரை பிணையில் செல்ல முடியாத விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் -

சார்ஜன்ட் ரொம்மாசோ மேலும் தெரிவித்தார்.

லோயல் தம்பதியினர் மிகவும் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தியதாக



மரிஸா லோயல்

அவர்களது உறவினர்கள் ஒரே குரலில் கூறுகின்றனர்.

என்ன நடந்தது என்பது மர்மமாகவே இருக்கின்றது. (ஒ)

# சமாதான விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டத்துக்கு 19 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,நவ.21

வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 16ஆம் திகதிமுதல் 4 நாள்கள் களுத்துறையில் நடைபெற்ற இந்தப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விளையாட்டு விழாவில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 7 மாவட்டங்களுடன் களுத்துறை மாவட்டமும் பங்குபற்றியது. இதில் களுத்துறை மாவட்டம் 199 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் 67 புள்ளிகளைப் பெற்ற யாழ்.மாவட்டம் இரண்டாம் இடத்தையும், 35 புள்ளிகளைப் பெற்று அம்பாறை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டியின் சிறந்த வீரராக முப்பாய்ச்சலில் 14.45 மீற்றர் பாய்ந்த களுத்துறை மாவட்ட வீரர் கே.ர. கயான் மலிக தெரிவானார். சிறந்த வீராங்கனையாக அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.சந்திரகலா டயஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளின்போது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களான ஜே.ஜேசுதாஸ், மிதிலா கனகசிங்கம் ஆகியோர் முறையே 1500 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர். 4x400 மீற்றர் பெண்களுக்கான அஞ்சல் ஓட்டத்தில் மிதிலா கனகசிங்கம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 5ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்கள் யாழ்.மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளன.

அப்போட்டியின் முடிவு வருமாறு:-

✦ எஸ்.சிவரஞ்சினி(முதலாமிடம் 22 நிமிடங்கள் 43.4 செக்கன்) யாழ்.மாவட்டம்.

✦ எஸ்.மேர்சி(இரண்டாமிடம் 22 நிமிடங்கள் 43.5 செக்கன்) யாழ். மாவட்டம்.

✦ கே.ஜெயசீலி(மூன்றாமிடம் 23 நிமிடங்கள் 45.8 செக்கன்) களுத்துறை மாவட்டம்.

ஆண்களுக்கான 5ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் வெற்றியடைந்தோரின் விவரம் வருமாறு:-

எம்.நவரத்ன விஜயசிங்க(முதலாமிடம் - 11 நிமிடங்கள் 43 செக்கன்) அம்பாறை மாவட்டம்.

எப்.ஏ.ஸ்டீபன்(இரண்டாமிடம் 17 நிமிடங்கள் 15.7 செக்கன்) முல்லைத்தீவு மாவட்டம்.

ஜே.நிமல் கருணாதிலக(மூன்றாமிடம் 17 நிமிடங்கள் 22.7 செக்கன்) களுத்துறை மாவட்டம். (ஓ-5-10)

*வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழாவில் மாவட்டங்கள் பெற்ற பதக்கங்களின் பட்டியல் வருமாறு:-*

| மாவட்டம் | தங்கம் | வெண்கலம் | வெள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|
| களுத்துறை | 24 | 15 | 16 | 55 |
| யாழ்ப்பாணம் | 6 | 9 | 4 | 19 |
| திருகோணமலை | 3 | 4 | 1 | 8 |
| அம்பாறை | 3 | 2 | 8 | 13 |
| வவுனியா | 2 | 4 | 1 | 7 |
| மட்டக்களப்பு | 2 | 2 | 3 | 7 |
| மன்னார் | - | 2 | 1 | 3 |
| முல்லைத்தீவு | - | 1 | - | 1 |
| கிளிநொச்சி | - | 1 | 1 | 2 |

# தென்னாபிரிக்க அணி தொடரை வென்றது

இலங்கை அணியுடனான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் பாக்கில் கடந்த 16ஆம் திகதி இப்போட்டி ஆரம்பமாகியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹசான் திலகரத்ண ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப்பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 448 ஓட்டங்களைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த இலங்கையணி, நான்காவது நாளன்று 3 விக்கெட் இழப்பிற்கு 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த இலங்கை அணி, 245 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

தென்னாபிரிக்க அணி வெற்றி பெறுவதற்கு 121 ஓட்டங்கள் தேவையான நிலையில் தனது இரண்டாவது இனனிங்ஸை ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் 73 ஓட்டங்களிற்கு 6 விக்கெட்டுக்களைத் தென்னாபிரிக்க அணி இழந்திருந்தது.

எனினும், நீல் மக்கன்ஸியும், மார்க் பவுச்சரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி தமது அணி வெற்றி பெற உதவினர். இறுதியில் 7 விக்கெட் இழப்பிற்கு 124 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது தென்னாபிரிக்க அணி.

இந்த இரண்டாவது டெஸ்டிலும் வெற்றிபெற்றதன்மூலம் 2-0 என்ற அடிப்படையில் தொடரை வெற்றி கொண்டது. தென்னாபிரிக்க அணி முதல் டெஸ்டில் தென்னாபிரிக்க அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷோன் பொலொக்கும் தொடரின் சிறப்பாட்டக்காரராக ஜக்கலிஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-5)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




செல்வன் கோபிகன்

அல்வாய் தெற்கு, மாலுசந்தியைச் சேர்ந்த
திரு.திருமதி பாஸ்கரன் - உதயபானு தம்பதியினரின் புதல்வன்

கோபிகன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (21.11.2002) வியாழக்கிழமை தமது இல்லத்தில் இனிதே சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

கோபிகனை வானத்தில் தோன்றும் பௌர்ணமி நிலவுபோல அவருடைய வாழ்வும் ஒளிவீசவேண்டும் என்றும், நோயின்றி நல்லபேர் புகழோடு பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்றும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த தயா மாமா, வசந்தா அத்தை, மைத்துனிமார் ஜனித்தா, ஜீவஜா, லண்டனைச் சேர்ந்த சன் மாமா, சாந்தா அத்தை, மைத்துனன் கேசவன், மைத்துனி யுவேதினி, மீசாலையைச் சேர்ந்த கோபால் மாமா, யாழினி அத்தை, மைத்துனிமார் சுரக்சனா, தர்க்சா, யசோ அத்தை, கவீஸைச் சேர்ந்த பிரகாஷ் மாமா, தீபன் மாமா, வதிரியைச் சேர்ந்த ரவி மாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

மாலுசந்தி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

தகவல்:
திரு.திருமதி பாஸ்கரன் குடும்பத்தினர்.

(10685)


# ஒருநாள் போட்டிகளில் ஹசான் திலகரத்ன சேர்ப்பு

தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை அணியில் ஹசான திலகரத்ன சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்போட்டிகளுக்காக கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட இலங்கை அணியில், ஹசான் திலகரத்ன சேர்க்கப்பட்டிருக்கவில்லை. டெஸ்ட் போட்டிகள் நிறைவடைந்தவுடன் அவர் தாயகம் திரும்பவிருந்தார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஹசான் திலகரத்ன ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப் பெற்றார். இந்நிலையில் அவரை ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் சேர்ப்பதற்கு தேர்வுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இத் தீர்மானத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளே ஹசான் திலகரத்ன பங்குபற்றிய ஒருநாள் சுற்றுப் போட்டிகளாகும்.

உலகக் கிண்ணப் போட்டியின் பின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான அணிகளிலிருந்து ஹசான் நீக்கப்பட்டார்.

இரண்டு வருடங்களின் பின் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டார். இப்போது 3 வருடங்களின் பின் ஒருநாள் போட்டிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

1986இல் ஒருநாள் போட்டிகளுக்கு அறிமுகமான ஹசான், 181 போட்டிகளில் 3,439 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவற்றுள் 2 சதங்கள், 12 அரைச்சதங்களும் அடங்குகின்றன.

## விளையாட்டு

# இங்கிலாந்து அணித் தலைவருக்கு ஷேன் வோர்ன் ஆலோசனை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன், இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் நஷர் ஹூசைனிற்கு விளையாட்டு தந்திரோபாயங்கள் குறித்து ஆலோசனை வழங்கியுள்ளார்.

இன்று ஆரம்பமாகும் இரண்டாவது ஆஷஸ் தொடரில், இரண்டு சுழல் பந்து வீச்சாளர்களை போட்டியில் ஈடுபடுத்தவும் மேலதிகமாகவுள்ள ஒரு துடுப்பாட்ட வீரரைப் போட்டியில் இருந்து தவிர்க்கலாம். எட்டு அல்லது ஒன்பது துடுப்பாட்டக்காரர்கள் போட்டியில் விளையாடிப் பயனில்லை.

பந்து வீச்சு சிறப்பாக இருக்க வேண்டும் என்று ஷேன் வோர்ன் இங்கிலாந்து அணித் தலைவரிடம் ஆலோசனை கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கை வீரர் முரளீதரன் டெஸ்ட் போட்டிகளில் அதிகமான விக்கெட்டுக்ளைக் கைப்பற்றுவது தவிர்க்கமுடியாது. முரளீதரன் அதிகளவு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி எமது சாதனையை முறியடிக்கக்கூடும். அவர் 800 முதல் 1,000 வரை விக்கெட்டுக்களைக் கைபற்றுவார் என்றும் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.


நன்றி நவில்கின்றோம்

ஆலயங்களில் அன்னதானம் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அன்னதானம் வழங்குவதற்கு நிதியுதவியை வழங்கிய இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரன் அவர்களுக்கு மனம் உவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆரம்பம் நிகழ்வு - நாளை (22.11.2002)
வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பரிபாலன சபையினர்,
வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்.

(10807)



உ
சிவமயம்

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான சித்திரபானு வருஷம் கார்த்திகைத் திங்கள் 6ஆம் நாள் நாளை (22.11.2002) வெள்ளிக்கிழமை மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகத்தில் கூடிய திவ்யதினத்தில் 9.30 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்தவேளையில்

பஞ்சாட்சர சர்மாவின் பௌத்திரனும்
அமிர்தலிங்க சர்மா தம்பதிகளின்
புத்திரனுமாகிய சிரஞ்சீவி
பத்மநாத சர்மாவிற்கு



இராசையாஐயாவின் பௌத்திரியும்
இராமச்சந்திர சர்மா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி
விஜிதாம்பாளை

மணமகளின் இல்லத்தில் கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்ய தாரணஞ்செய்ய மாளையடி அருட்செல்வ விநாயகர் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் - காலை 4.00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்புபசாரம் - 23.11.2002 சனிக்கிழமை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ ப.அமிர்தலிங்க சர்மா ~
சொர்ணலட்சுமி தம்பதிகள்
தணவி, கொட்டுநடீ முருகன் கோயில்,
வட்டுக்கோட்டை.

பிரம்மஸ்ரீ இ.இராமச்சந்திர சர்மா ~
இராசலட்சுமி தம்பதிகள்
சிவன் வீதி, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(10791)

வரவேற்பாளர்கள்: பிரம்மஸ்ரீ க.இரத்தினஐயர் - மனோன்மணி அம்மா (அளவெட்டி) தம்பதிகள், பிரம்மஸ்ரீ அ.பஞ்சாட்சர சர்மா - பிருந்தா (லண்டன்) தம்பதிகள், பிரம்மஸ்ரீ அ.பகீரதசர்மா - சுபாநாயகி (புலோலி) தம்பதிகள், செல்வி அ.விஜயலட்சுமி, செல்வன் அ.பத்மரூபசர்மா, பிரம்மஸ்ரீ ந.மகேஸ்வர சர்மா - விஜயகௌரி தம்பதிகள் (வட்டக்கச்சி), பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா - ஞானாம்பிகை தம்பதிகள் (ஸ்கந்தபுரம்), செல்வன் இ.கஜேந்திர சர்மா, செல்வி இ.லஸ்சனா.



90ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி அ.இராதலக்சுமி

(ராதா)

(அப்பாக்குட்டி - தெய்வநாயகி அவர்களின் மகள்)

பிறப்பு: 15.12.1979
இறப்பு: 24.08.2002

இன்று(21.11.2002) வியாழக்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
மாவிட்டபுரம்,
மாரியம்மன் கோயிலடி,தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை. (மாவடி)

(10810)

# ஈழத் தமிழர் தனித்துவம் பேணுவதில் ரி.ரி.என். தனி அக்கறை செலுத்தும்

**ரி.ரி.என்.(தமிழ் தொலைக்காட்சி இணையம்). ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பாகி வரும் தமிழ் தொலைக்காட்சி ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கனடா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுக ளிலும் இது ஒளிபரப்பாகி வருகின்றது. பல லட்சம் தமிழ் ரசிகர்களை தன்னகத்தே கொண்டுள்ள ரி.ரி.என். தற்போது யாழ்ப்பாணத்திலும் தனது செயற்பாடுகளுக்கான தளத்தைப் பதித்துள்ளது. ஈழத்துக்கு தமது ஒளிபரப்பை விரிவாக்குவதன் முதற்படியாக இங்கு அவர்கள் தமது செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளனர். ஈழத்துக்கான செயற்றிட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ரி.ரி.என். ஒளிபரப்பின் சுவிஸ் பிரதிநிதி சிவசுப்பிரமணியம் பிரபாகரன் அண்மையில் உதயனுக்கு அளித்த பேட்டி இது.**

*கேள்வி:* ரி.ரி.என். என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது?

*பதில்:* ஐரோப்பிய நாடுகளில் குடியேறிவாழும் ஈழத் தமிழர்களிடையே தமிழ்கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதையும் அவர்கள் மத்தியில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவைத் திரட்டுவதையும் ஐரோப்பிய நாடுகளிலேயே பிறந்து வளரும் அடுத்த சந்ததிக்கு தமிழர்களின் பாரம்பரியங்களை எட்டச் செய்வதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு ரி.ரி.என் எனப்படும் தமிழ் தொலைக்காட்சி இணையம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த இலக்குடனேயே அது தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

*கேள்வி:* தற்போது எந்தெந்த நாடுகளில் நீங்கள் ஒளிபரப்புக்களை மேற்கொண்டுள்ளீர்கள்?

*பதில்:* ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் நாம் தமிழ் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்கின்றோம். அது தவிர எமது சகோதர நிறுவனமான ரி.வி.ரி தொலைக்காட்சி மூலம அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய




நாடுகளிலும் எமது ஒளிபரப்பை மேற்கொண்டுள்ளோம். இங்கெல்லாம் எமக்கு பல லட்சம் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

*கேள்வி:* உங்கள் சேவைகளை நீங்கள் இப்போது ஈழத்துக்கு விஸ்தரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள் போன்று தோன்றுகின்றது. அதற்கான காரணம் என்ன? இவ்வளவு நீண்ட காலத்தின் பின்னர் ஏன் இந்த முயற்சி?

*பதில்:* எமது பார்வையாளர்களில - ரசிகர்களில் - அதிகமானவர்கள், ஈழத் தமிழர்கள்தான். ஆனால் இதுவரை நாம் எமது ஒளிபரப்புக்களில் 60சதவீதமானவற்றை இந்தியத் தயாரிப்புக்களைக் கொண்டும் மிகுதி 40 சதவீதமானவற்றை மட்டுமே எமது சொந்தத் தயாரிப்புக்களைக் கொண்டும் ஒளிபரப்பி வந்தோம்.

ஈழத்தில் நிலவி வந்த போர்ச் சூழல் காரணமாக இங்கிருந்து எந்தப் படைப்புக்களும் எமக்குக் கிடைக்கவில்லை. எம்மாலும் இங்கிருந்து நிகழ்ச்சிகளைப் பெறவோ எமது செயற்பாடுகளை இங்கு விஸ்தரிக்கவோ முடியவில்லை.

ஆனால், தற்போது இங்கு ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை அடுத்து நாம் ஈழத்திலும் எமது செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

எமது பார்வையாளர்கள் ஈழத் தமிழர்கள் என்பதனால் இங்கிருந்து வரும் தயாரிப்புக்களை ஒளிபரப்புச் செய்வதில் நாம் அதிக ஆர்வமாக இருக்கின்றோம். அதற்கான வழிவகைகளில் செயற்படுவோம்.

*கேள்வி:* அந்த வகையில் தற்போது நீங்கள் என்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள்?

*பதில்:* எமது விஸ்தரிப்புத் திட்டத்தின் முதற்படியாக நாம் யாழ்ப்பாணத்தில் மாணவர்களிடையேயான அறிவுப் போட்டியொன்றை 'அறிவுச் செல்வம்' என்ற பெயரில் நடத்தியுள்ளோம். அதில் வென்ற மாணவி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசையும் வழங்கியுள்ளோம். அது தவிர இந்தப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பணப் பரிசில்களையும் வழங்கியுள்ளோம்.

இந்தச் நிகழ்ச்சித் தயாரிப்புக்காக நாம் சுமார் 12 லட்சம் ரூபா செலவிட்டுள்ளோம்.

*கேள்வி:* இந்த அறிவுப் போட்டி நிகழ்ச்சியை நீங்கள் யாழ். வலயத்தில் மட்டும் நடத்தியது குறித்து குடா நாட்டில் உள்ள பல்வேறு தரப்பினரிடமும் அதிருப்தி உள்ளதே அது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* இது குறித்து நானும் அறிந்துள்ளேன். ஆனால், நாம் இங்கு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது இதுதான் முதற்றடவை. உடனடியாக எல்லாவற்றையும் ஏற்பாடு செய்வது எமக்



குக் கடினமான காரியமாக இருந்தது. இதனால் மாகாணக் கல்வி அமைச்சுடன் நாம் தொடர்புகொண்டோம். அவர்கள் ஒரே நேரத்தில் யாழ்ப்பாணம் முழுவதற்குமான போட்டிகளை நடத்துவது கஷ்டமான காரியம் என்பதால ஒவ்வொரு வலயங்களுக்கும் தனித் தனியாகப் போட்டிகளை நடத்துங்கள என்று எமக்கு ஆலோசனை கூறினர்.




அதன்படியே நாம் முதலில் யாழ். கல்வி வலயத்தில் போட்டிகளை நடத்துவதற்கு முடிவு செய்தோம்.

இனிவரும் காலங்களில் மற்றைய வலயங்களிலும் இந்தப் போட்டியை நடத்தவுள்ளோம்.

*கேள்வி:* எப்போது அவற்றை நடத்துவீர்கள்?

*பதில்:* எதிர்வரும் தைப்பொங்கலுக்குப் பின்னர் அடுத்தடுத்த போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள ளோம்.

*கேள்வி:* இது தவிர வேறு என்ன நிகழ்ச்சிகளை இங்கு நீங்கள் தயாரித்துள்ளீர்கள்?

*பதில்:* சுவிஸில் வருடாந்தம் வழங்கப்படும் மிலேனியம் விருதுக்குப் போட்டியிடுவதற்காக முதற்றடவையாக இங்கிருந்து ஒருவரைத் தெரிவுசெய்து அவரை சுவிஸ் அழைத்துச் செல்லவுள்ளோம். அதற்கான செலவுகள் அனைத்தையும் நாமே பொறுப்பேற்போம். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்து வரும் பாடகர்களுடன் இவர் போட்டியிட்டு தனது திறமையை வெளிப்படுத்தினால் அவருக்கு விருது வழங்கப்படும்.

*கேள்வி:* அவரை எப்படித் தேர்வு செய்தீர்கள்?

*பதில்:* வீரசிங்கம் மண்டபத்தில் நாம் ஒரு 'பாடும் ஸ்வரங்கள்' போட்டியை நடத்தினோம். அதில் 98பேர் கலந்துகொண்டனர். அவர்களில் குரல் வளம், சுருதி ஆகியவற்றின் அடிப்படையில் 12பேர் இறுதியாகப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்களிடையே நடந்த போட்டியில் வெற்றி பெற்ற இசையமுதன் என்பவரே தற்போது சுவிஸ் அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

இந்தப் போட்டியில் இறுதியில் இருவர் வெற்றிபெற்றனர். எனினும் அவர்களில் ஒருவர் மீண்டும் மீண்டும் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்திய பின்னணிப் பாடகர்களின் பாடல்களையே பாடினார். புதிதாக - சுயமாக - எதனையும் அவர் பாடவில்லை. ஆனால், இசையமுதன் சுயமான ஒரு முயற்சியை மேற்கொண்டார். அதன் காரணமாகவே சுவிஸ் போட்டிக்கு அவரைத தேர்வு செய்தோம். எதிலும் ஈழத் தமிழர்களின் தனித்துவத்தைப் பேணுவதில் நாம் அக்கறையாக இருக்கின்றோம்.

*கேள்வி:* நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றீர்கள் என்பது சரி, உங்கள் தொலைக்காட்சியை இங்கு ஒளிபரப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் எவற்றையாவது செய்கிறீர்களா?

*பதில்:* ஈழத்தில் மிக உக்கிரமாக சண்டை நடந்துகொண்டிருந்த போது எமது மக்களுக்கு உண்மையான செய்திகள் சென்று சேரவேண்டும் என்பதற்காக ஆஸ்திரேலியாவில இருந்தபடி இங்கு ஒளிபரப்பை மேற்கொள்வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால், அதற்குள் போர் ஓய்ந்து ஒரு சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளது. தற்போதைய இந்தச் சமாதானச் சூழல் காரணமாக இலங்கை அரசின் அனுமதியுடன் இங்கிருந்தே ஒளிபரப்பை மேற்கொள்ளும் வசதி ஏற்பட்டுள்ளது. எனவே அதற்கான முயற்சிகளில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம். அந்த முயற்சிகள் வெற்றிபெறும் என்றே நம்புகின்றோம்.

*கேள்வி:* ஈழத்தைப் பொறுத்தவரை உங்கள் தொலைக்காட்சியின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

*பதில்:* எமது நாட்டில் உள்ள பல துறைகளையும் சேர்ந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்களைச் சந்தித்து அவர்களிடம் இருந்து நிகழ்ச்சிகளையும் பேட்டிகளையும் பெற்று எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் எமது தொலைக்காட்சியில் காலை 8மணி முதல் ஒரு மணி நேரத்துக்கு ஒளிபரப்புவதற்கு முடிவு செய்துள்ளோம். தற்போது ஒளிபரப்பாகி வரும் 'புத்தம்புது காலை' என்ற நிகழ்ச்சியில் இவற்றையும் சேர்த்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இதற்காக எமது செயற்றிட்டங்கள் குறித்து இங்குள்ள நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடன் நாம் தொடர்ந்து சந்திப்புக்களை நடத்தவுள்ளோம்.

*கேள்வி:* ஈழத்தின் திரைப்படத் துறை மற்றும் தொடர் திரை நாடகங்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் உங்கள் பங்களிப்பு எந்தளவுக்கு இருக்கும் என்று கூறமுடியுமா?

*பதில்:* இதற்கான முயற்சிகளையும் செயற்படுத்துவதற்கு நாம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம். 40 நிமிட நேரத்தைக் கொண்ட குறும்படப்போட்டி ஒன்றை நடத்துவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம். அவற்றில் தரமானவற்றை நாமே கொள்வனவு செய்து அவற்றை எமது தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பவுள்ளோம்.

இந்தப் போட்டியில் திறம்படச் செயற்படுபவர்களைக் கொண்டு நாமே சொந்தமாக பெரியளவிலான தொடர் திரை நாடகங்களைத் தயாரிப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

இங்கிருந்து ஆவணப்படங்களைத் தயாரிப்பது தொடர்பான ஒரு முயற்சியையும் நாம் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கான உபகரண வசதிகளையும் நாம் செய்துகொடுப்போம். ஆனால் அவற்றுக்கு அவர்கள் சிறிய தொகையைச் செலுத்தவேண்டி இருக்கும். அந்த ஆவணப் படங்கள் சிறப்பாக இருக்கும் பட்சத்தில் அவற்றை நாமே அவர்களிடம் இருந்து கொள்வனவு செய்து கொள்வோம்.

இங்கு உடனடியாக திரைப்படத் துறை தொடர்பான முயற்சிகளை ஆரம்பிக்க முடியாது. அதற்கான வசதி வாய்ப்புக்கள் இங்கு மிக்க குறைவாகவே இருக்கின்றன. எனவே முதலில் சிறியளவிலான முயற்சிகளையே ஆரம்பிக்க முடியும்.

*கேள்வி:* வேறு என்ன திட்டங்களை செயற்படுத்துப் போகின்றீர்கள்?

*பதில்:* நாம் நடத்திய 'பாடும் ஸ்வரங்கள்' போட்டிக்குத் தேர்வு பெற்ற 12பேரையும் வைத்து ஒரு சொந்த 'ஆல்பம்' தயாரிப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். வெகுவிரைவில் அதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

ரி.ரி.என். எமது மக்களின் தொலைக்காட்சி அவர்களை முன்னேற்றுவதற்கான அனைத்தையும் நாம் மேற்கொள்வோம்.

**- *சந்திப்பு:* பிரேம்**


# ஏ.சி.சி.ஏ. நிறுவனக் கருத்தரங்கு

ஏ.சி.சி.ஏ. (**Association of chartered Certified Accountants**) கணக்கியல் துறையில் உலகெங்கும் மிகப் பரந்த அளவில் துரிதமாக வளர்ந்து வரும் ஒரு நிறுவனமாகும். இது உலகில் 160 நாடுகளில் சுமார் மூன்று லட்சம் உறுப்பினர்களையும், மாணவர்களையும் மற்றும் 70 அலுவலகங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. கொழும்பில் இயங்கிவரும் இதன் இலங்கைக்கான அலுவலகம் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி தொழில் வழிகாட்டலுக்கான கருத்தரங்கை நடத்தவுள்ளது.

யாழ்.மாணவர் ஏ.சி.சி.ஏ. பற்றியும், அதனூடாகப் பெறக்கூடிய கல்வித் தராதரங்கள் மற்றும் அனுகூலங்கள் பற்றியும் யாழ்.மாணவருக்கு அறிவூட்டுவதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

இக்கருத்தரங்கு குறிப்பிட்ட தினத்தன்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான பாடசாலைகளின ஜீ.சி.ஈ. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்படவுள்ளனர்.

இந்த நிறுவனத்தால் வழங்கப்படும் வாழ்க்கைத் தொழில்சார் தராதரமானது மாணவர்களுக்கு மட்டுமன்றி. வர்த்தகத்துறையினர் அரசசார்பான மற்றும் தனியார் நிறுவனத்தினருக்கும பயன்தரக்கூடியவை என்று, கொழும்பில் இயங்கும் இதன் கிளையின் முகாமையாளர் அஜித்த பெரேரா கூறுகின்றார்.



**18 வெளிநாட்டு நிறுவனங்களின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர்களான ஹேமாஸ் பார்மஸியுடிகல் நிறுவனத்தினர் யாழ்.மாவட்டத்திற்கும் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளனர். இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கடந்த 16ஆம் திகதி இடம் பெற்றது. அந்நிகழ்வில் மருந்தியல் குறித்து ஹேமாஸ் நிறுவன அதிகாரி விளக்கமளித்தபோது எடுக்கப்பட்ட படம்.**

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
திருமதி ச.திருச்செல்வம் அவர்களின் பாசமிகு
சகோதரன்

### மாரிமுத்து விஜயரத்தினம்

*(இலங்கை வங்கி வெளிநாட்டுக்கிளை முகாமையாளர், கொழும்பு-01)*

அவர்கள் 19.11.2002 இல் திடீர்மரணம் எய்தியதையிட்டு கலங்கி நிற்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/சாவகச்சேரி*
*இந்து ஆரம்ப பாடசாலை.* (C/24992)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## கட்டாக்காலிகளால் மந்துவிலில் பயிர்கள் நாசம்

மந்துவில் பகுதியில் கட்டாக் காலிகளாகத் திரியும் கால்நடைகளால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் பகல் நேரங்களில் சீருடையினரின் முகாம் பகுதிகளில் மேய்ந்துவிட்டு, இரவு நேரங்களில் வயல் வெளிகளில் நுழைந்து பயிர்களை நாசஞ்செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதனால் இக்கால்நடைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## நான்காவது வருட நினைவஞ்சலி

தோற்றம்
31
-
01
-
1949



மறைவு
05
-
12
-
1998

### திருமதி ராணி ஜெகசோதி

(முன்னாள் ஆசிரியை, சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை)
திதி : 21.11.2002

**எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!**
**குவலயம் போற்ற குன்றாத புகழுடன் நீ வாழ்ந்தாய்**
**நாமெல்லாம் வாடி நிற்க நீ எங்கம்மா சென்றாய்?**
**நாலாண்டு சென்றதுவோ நாமாறவில்லை - நீ சாந்திபெறு!**

*198, சென் பெனடிக் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (10814)

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
13
-
09
-
1942



உதிர்வு
18
-
11
-
2002

அமரர்
### அண்ணா இராஜேந்திரம்

(ஓய்வு பெற்ற யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளர்)

**அலுவலகம் தன்னை அகமாக எண்ணிக் கடமையுணர்வோடு பணியாற்றிய பண்பாளரும், அமைதியுடன் எவருக்கும் உதவி புரிபவரும், எளிமையானவருமான உத்தமர் அமரர் அண்ணா இராஜேந்திரம் அவர்களின் பிரிவையிட்டு நாங்கள் ஆழ்ந்த துயரடைகின்றோம்.**

**அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

மேல் நீதிமன்ற உத்தியோகத்தர்கள்,
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(10813)

## மரண அறிவித்தல்கள்

### முத்துத்தம்பி லோகநாதன்

வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்துத்தம்பி லோகநாதன் நேற்று (20.11.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூபதி அம்மாள், பாலாம்பிகை மற்றும் இராசாத்தி அம்மா, கமலாதேவி, கனகலிங்கம், தியாகம்மா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திராதேவி அவர்களின் அன்புக் கணவரும் லோகேந்திரன், பிரிதா, கஜேந்திரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் சர்வேஸ்வரி, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துசாந்தினி, லோஸிகா ஆகியோரின் பேரனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*4 ஆம் வட்டாரம்,*
*வேலணை.* (10817)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### திருநாவுக்கரசு மணிவண்ணன்

*(Director, Glenmore, Properties, Sudbury, London.)*

யாழ்ப்பாணம், சுருவிலைப்பிறப்பிடமாகவும், சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் தற்போது **South Harrow London** இல் வசித்தவருமான திருநாவுக்கரசு மணிவண்ணன் 18.11.2002 திங்கட்கிழமை அகால மரணமானார்.

